## முதல்வர் மு.க.ஸ்டாலின்

# தமிழ்நாட்டில் உள்கட்டமைப்புகளை மேம்படுத்த திட்டங்களை தீட்டியுள்ளார்!

## கரூரில் அமைச்சர் செந்தில்பாலாஜி பேச்சு!



கரூர், ஜன.6-

கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி தொகுதியில் அமைச்சர் வி. செந்தில்பாலாஜி, ரூ.1.79 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட 9 கட்டிடங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, ரூ.2.65 கோடி மதிப்பீட்டில் புதிதாக 9 திட்டப் பணிகளுக்கான கட்டுமானப் பணிகளையும் துவக்கி வைத்தார்.

மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி, கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் தலைமையில் கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியில் புதிதாக கட்டப்பட்ட கட்டடங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து புதிய திட்ட பணிகளை துவக்கி வைத்தார்.

மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி பேசியதாவது

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதே போன்று நவீன காலத்திற்கு ஏற்றவாறு பொது மக்களுக்குத் தேவையான வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் நிதியினை சீராக வழங்கியுள்ளார்கள்.

அந்த வகையில், அரவக்குறிச்சி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருக்காடு துறை ஊராட்சி ஆலமரத்துமேட்டில் ரூ.42 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட நீர் உந்து நிலையம், புன்னம் ஊராட்சி பெரிய ரங்கபாளையத்தில் ரூ17 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட 30000 லிட்டர் கொள்ளவு கொண்ட மேல் நிலை. நீர்தேக்க தொட்டி, அத்திப்பாளையம் ஊராட்சி வளையளையத்தில் ரூ.20.13 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க கட்டிடம். முன்னூர் ஊராட்சியில் ரூ.13.16 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட நியாய விலைக்கடை கட்டிடம், நடத்தை ஊராட்சி முத்துராஜ்புரத்தில் ரூ.13.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய சமுதாயக் கூடம்.

நடத்தை ஊராட்சி, வெள்ளியம்பாளையம் காலனியில் ரூ.21இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட சமுதாயக் கூடம், சின்னதாராபுரம் ஊராட்சி காட்டாயம்புதூரில் ரூ.13.59 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட நியாய விலைக் கடை, எலவனூர் ஊராட்சியில் ரூ.23.57 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம். ரூ.13.16 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய நியாய விலை கடை என மொத்தம் ரூ.170 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட புதிய கட்டடங்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

தொடர்ந்து, நொய்யல் வடிவேல் நகர். பி.கே.ஸ் நகர், அண்ணா நகர் ஆகிய பகுதியில் ரூ.39 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டவுள்ள தார்சாலை,. ஈரோடு செல்லும் சாலையில் ரூ.8.இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டள்ள நொய்யல் பேருந்து நிறுத்த நிழற்குடை கட்டுமானப் பணி, வேட்டமங்கலம் ஊராட்சி குந்தாணிபாளையத்தில் ரூ.77 இலட்சம் மதிப்பீட்டில் புதிய சமுதாயக் கூடம், புன்னம் ஊராட்சி, புன்னம் ஆதிதிராவிடர் பள்ளியில் ரூ.55 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள அறிவியல் ஆய்வுக்கூடம், நடுப்பாளையத்தில் ரூ.17இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட 30000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நிலை நீர்தேக்க தொட்டி, க.பரமத்தி ஊராட்சியில் ரூ.16.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டவுள்ள 30,000 லிட்டர் கொள்ளவு கொண்ட மேல் நிலை நீர் தேக்கத்தொட்டி,

மலைச்சியூர் பிரிவில் ரூ.17 இலட்சம் மதிப்பிட்டில் அமைக்கப்பட்டவுள்ள 30000 லிட்டர் கொள்ளவு கொண்ட மேல் நிலை நீர்தேக்கத் தொட்டி, மல்லநத்தம் பகுதியில் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டவுள்ள சுகாதார வளாக கட்டிடம், சின்னதாராபுரம் பெட்ரோல் பங்கு முதல் கோடந்தூர் வழி பெரியதிருமங்கலம் சாலை சந்திப்பை ரூ.20.85 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணியையும் என மொத்தம் ரூ2.65 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணி களுக்கான கட்டுமானப் பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மொத்தம் 9 புதிய முடிவற்ற கட்டிடங்களை திறத்து வைக்கப்பட்டு. 9 புதிய திட்டப் பணிகளையும் துவக்கி வைக்கப்பட்டுள்ளது என அமைச்சர் வி. செந்தில்பாலாஜி தெரிவித்தார்.

சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.மாணிக்கம் (குளித்தலை), ஆர் இளங்கோ(அரவக்குறிச்சி),

க.சிவகாமசுந்தரி (கிருஷ்ணராயபுரம்), மாவட்ட வருவாய் அலுவலர் ம. கண்ணன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் ஸ்ரீலேகா தமிழ்ச்செல்வன், கூட்டுறவு சங்கக்களின் இணை பதிவாளர் கந்தராஜா. மாவட்ட வழங்கல் அலுவலர் மரு.சுரேஸ், உதவி இயக்குநர்(ஊராட்சிகள்) சரவணன், கரூர் வருவாய் கோட்டாட்சியர் முகமதுபைசல், ஆவின் பொது மேலாளர் பிரவீனா மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் சக்தி பால கங்காதரன், புகலூர் தமிழ் நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவன பொது மேலாளர் கலைச்செல்வன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

---

### ஈரோடு தெற்கு மாவட்டம்

## கொடுமுடி வடக்கு, கொடுமுடி தெற்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம் மற்றும் ஒன்றியக் கழக பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் ஈரோடு தெற்கு மாவட்டம், கொடுமுடி வடக்கு ஒன்றியம், கொடுமுடி வடக்கு, கொடுமுடி தெற்கு ஆகிய 2 ஒன்றியக் கழகங்களாக பிரிக்கப்பட்டு, அவ்வாறு பிரிக்கப்பட்ட ஒன்றியங்களுக்கு கழகப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

அவ்வாறு பிரிக்கப்பட்ட கொடுமுடி வடக்கு, கொடுமுடி தெற்கு ஆகிய ஒன்றியங்கள் பின் வரும் ஊராட்சிகள் மற்றும் பேரூர்கள் கொண்டதாக அமையும்.

**கொடுமுடி வடக்கு ஒன்றியம்:** 1.கொளத்துப்பாளையம், 2.கொளாநல்லி ஆகிய 2 ஊராட்சிகள் மற்றும் பாசூர், கிளாம்பாடி, ஊஞ்சலூர், வெள்ளோட்டம்பரப்பு ஆகிய 4 பேரூர்கள்.

**கொடுமுடி தெற்கு ஒன்றியம்:** 1.ஆவுடையார்பாறை, 2.அய்யம்பாளையம், 3.எழுநூத்திமங்கலம் ஆகிய 3 ஊராட்சிகள் மற்றும் சென்னசமுத்திரம், கொடுமுடி, வெங்கம்பூர் ஆகிய 3 பேரூர்கள்.

**ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்**

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட கொடுமுடி வடக்கு, கொடுமுடி தெற்கு ஆகிய ஒன்றியங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் பின் வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**கொடுமுடி வடக்கு ஒன்றியம்**

**கொடுமுடி வடக்கு ஒன்றியச் செயலாளராக பணியாற்றி வரும் மு.சின்னசாமி அவர்கள் தனது வயது முதிர்வு மற்றும் உடல்நலக் குறைவு காரணமாக அவர் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொண்டதால், அவருக்குப் பதிலாக சி.முத்துக்குமார்** (வேங்கியாம்பாளையம், பாசூர் & அஞ்சல், கொடுமுடி தாலுக்கா, ஈரோடு மாவட்டம் - 638 154) **அவர்கள் கொடுமுடி வடக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.**


**கொடுமுடி தெற்கு ஒன்றியம்**

பொறுப்பாளர் : **பி.எஸ். சிவகுமார்,** பி.ஏ.,பி.எல்.,
132, அரச்சலூர் மெயின் ரோடு,
சாலைப்புதூர் அஞ்சல்,
கொடுமுடி - 638 151.
ஈரோடு மாவட்டம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 5.1.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---




---

### விழுப்புரம் தெற்கு மாவட்டத்தில் - துணை முதல்வர்

## உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா - தெருமுனைப் பிரச்சார கூட்டம்!



விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதம சிகாமணி அறிவிப்பு

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனப்படி, கழக துணைப் பொதுச் செயலாளர் வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி வழிகாட்டுதல்படி , கழக அரசின் சாதனை விளக்க தெருமுனை பிரச்சாரக் கூட்டங்கள் கீழ்காணும் அட்டவணைபடி நடக்க உள்ளது.

| ஒன்றியம் / பேரூர் | 09.01.2025 (வியாழன்)<br>ஒன்றியசெயலாளர் | பேச்சாளர்கள் |
|---|---|---|
| விக்கிரவாண்டி (கிழக்கு) | ஜெய. ரவிதுரை<br>94430 47780 | S.K. ஸ்ரீராம்<br>9840161095<br>கீர்த்தனா<br>63690 93393 |
| காணை(தெற்கு) | கல்பட்டுV. ராஜா<br>98423 37288 | தூத்துக்குடிசரத்பாலா<br>9443716305<br>முல்லைவேந்தன்<br>9655151314 |
| கண்டமங்கலம் (மேற்கு) | வி.ஜி. பிரபாகரன்<br>94432 38500 | புரட்சிதாசன்<br>96772 60133<br>ஷர்மிளா<br>63805 00836 |
| வானூர் (கிழக்கு) | P.K.T. முரளி<br>94432 67701 | வே. வல்லபராசு<br>99946 88469<br>ஷிபானாமரியம்பீவி<br>63824 55077 |
| மணம்பூண்டி | அ.சா.ஏ. பிரபு<br>99425 08910 | ஆரணிமாலா<br>95789 92774<br>முத்துப்பாண்டி<br>63830 63265 |
| திருவெண்ணெய்நல்லூர் (மேற்கு) | P.V.R. விசுவநாதன்<br>9942173333 | சேலம்சுஜாதா<br>96260 50717<br>94433 26955<br>மேசியா<br>63798 30745 |
| திருவெண்ணெய்நல்லூர் (பேரூர்) | பூக்கடைகணேசன்<br>90034 75104 | எழும்பூர்கோபி<br>98406 63799<br>வேல்முருகன்<br>96039 57032 |
| வளவனூர் (பேரூர்) | பா. ஜீவா<br>94435 39712 | சிறுவானூர்பரசுராமன்<br>96260 58003 |
| அரகண்டநல்லூர் (பேரூர்) | ஆர். சுந்தரமூர்த்தி<br>81100 89591 | முரசொலிமூர்த்தி<br>8939139429<br>இன்பத்தமிழன்<br>74187 04676 |
| கோட்டக்குப்பம் (நகரம்) | எஸ்.எஸ்.ஜெயமூர்த்தி<br>98427 80574 | காசிவிசுவநாதன்<br>94439 59170<br>காசிகலைச்செல்வன்<br>87548 29988 |
| கோலியனூர் (கிழக்கு) | ப. தெய்வசிகாமணி<br>94430 81335 | செந்தூர்பாலகிருஷ்ணன்<br>96004 65455<br>வெற்றிச்செல்வன்<br>97863 85339 |
| | 10.01.2025 (வெள்ளி) | |
| விக்கிரவாண்டி (மேற்கு) | வேம்பிஜெ.ரவி<br>94426 32537 | எழும்பூர்கோபி<br>98406 63799<br>எப்னாமேரி<br>88258 89902 |
| காணை (வடக்கு) | ஆர். முருகன்<br>70940 06936 | செந்தூர்பாலகிருஷ்ணன்<br>96004 65455<br>ஜஸ்மின்சுவேதா<br>99407 01529 |
| கோலியனூர் (மேற்கு) | க. மும்மூர்த்தி<br>94425 58688 | ஆரணிமாலா<br>95789 92774<br>சதிஸ்<br>81220 38313 |
| கண்டமங்லம் (கிழக்கு) | வே. கணேசன்<br>9159154589 | முரசொலிமூர்த்தி<br>8939139429<br>உமாராணி<br>9894159986 |
| வானூர் (மேற்கு) | மைதிலிராஜேந்திரன்<br>95000 58051 | சிறுவானூர்பரசுராமன்<br>96260 58003<br>ஷாநவாஸ்<br>8148146242 |
| முகையூர் (வடக்கு) | ஜீ.இரவிச்சந்திரன்<br>99656 22687 | S.K. ஸ்ரீராம்<br>9840161095<br>நேரு<br>89254 94650 |
| திருக்கோவிலூர் (கிழக்கு) | மு. தங்கம்<br>94430 87882 | சேலம்சுஜாதா<br>96260 50717<br>94433 26955<br>பிரசாந்த்<br>9688168217 |
| | 11.01.2025 (சனி) | |
| விக்கிரவாண்டி (மத்திய) | ஜெ. ஜெயபாலமுருகன்<br>78716 97075 | வே. வல்லபராசு<br>99946 88469<br>காருண்யா<br>9361163375 |
| காணை (மத்திய) | ஆர்.பி. முருகன்<br>80564 97302 | புரட்சிதாசன்<br>96772 60133<br>சின்மதி<br>75388 88094 |
| கோலியனூர் (தெற்கு) | தே. முருகவேல்<br>96774 36767 | தூத்துக்குடிசரத்பாலா<br>9443716305<br>அருண்குமார்<br>70947 36328 |
| கண்டமங்லம் (மத்திய) | கு.செல்வமணி<br>98655 84228 | சிறுவானூர்பரசுராமன்<br>96260 58003<br>விக்னேஸ்வரி<br>9025128861 |
| கிளியனூர் | கே.எஸ். இராஜி<br>97860 58338 | ஆரணிமாலா<br>95789 92774<br>பூர்ணிமா<br>82204 88514 |
| முகையூர் (தெற்கு) | எஸ். லூயிஸ்<br>98426 16471 | எழும்பூர்கோபி<br>98406 63799<br>அகமதுசுல்தானா<br>98944 32999 |
| விக்கிரவாண்டி (பேரூர்) | எல்.ஏ.எம். நயினாமுகமது<br>94869 67050 | துரைமணிவேலன்<br>99444 94849<br>ரேவதி<br>90872 30359 |

விழுப்புரம்தெற்குமாவட்டத்திற்குஉட்பட்டமாநிலநிர்வாகிகள்,சட்டமன்ற உறுப்பினர்கள் , மாவட்ட ஒன்றிய நகர் - பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் , உள்ளாட்சி பிரதிநிதிகள் , கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் பொன்.கௌதமசிகாமணி**
பொறுப்பாளர்
விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க.